மாலை முரசு
பக்கங்கள் 15
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 16 சனிக்கிழமை 02.09.2023 அதிர்வு 33

## வாகன விபத்தில் தந்தை, மகள் பலி

வாகன விபத்தில் தந்தையும், மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து வாரியபொல – மாதம்பே பகுதியில் இன்று இடம் பெற்றுள்ளது என்று வாரியபொல 04 ▶

# தர்மலிங்கத்தின் நினைவேந்தல் தாவடி நினைவுத்தூபியில் இன்று





- எஸ்.நிதர்ஷன் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 38ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று காலை 7 மணியளவில் யாழ். தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் நடைபெற்றது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆ.சி.கணேசவேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

"ஈழத்தமிழரின் சமகால 04 ▶

# பிரபா தவிர வேறு தமிழ் தலைவர்கள் சிங்களவரால் கொல்லப்படவில்லை!



## சித்தார்த்தன் கூறுகின்றார்

- எஸ்.நிதர்ஷன் -

**"என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் தம்பி பிரபாகரனைத் தவிர வேறு எந்தவொரு தமிழ் அரசியல் தலைவரும் சிங்களப் படைகளால் அல்லது பொலிஸாரால் அல்லது சிங்களத் தரப்பால் கொல்லப்படவில்லை."**

**- இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இன்று தெரிவித்தார்.** 04 ▶



## யாழ். கட்டுடையில் வாள், கோடரியுடன் சிக்கிய இளைஞர்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்., மானிப்பாய் – கட்டுடையில் வாள் மற்றும் கோடரியுடன் நேற்றிரவு இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய மானிப்பாய், கட்டுடைப் பகுதிக்கு விரைந்த பொலிஸார், வாள் மற்றும் கைக் கோடரியுடன் நடந்து சென்ற 04 ▶

## தமிழ்க் கூட்டமைப்புடன் பேச டலஸ் அணியினர் தீர்மானம்

"இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய என்பவற்றுடன் எதிர் வரும் நாள்களில் கலந்துரையாடலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்."

– இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமைத்துவம் வகிக்கும் 04 ▶

## வேட்புமனுவை இரத்தாக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடையாது

"உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்யும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. 04 ▶



## ரணில் ஆதரவுக் கூட்டணியின் தலைமை அநுர யாப்பாவுக்கு!

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள – ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான – புதிய கூட்டணிக்கு தலைமை தாங்கும் பொறுப்பு 03 ▶



## கரடி தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்!

வவுனியாவில் கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். 03 ▶

# பௌத்தத்துக்கும் இந்து மதத்துக்கும் இடையில் நெருக்கடியை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு

அரசு வலுவாக செயற்படும் போது பௌத்த மற்றும் இந்து மதங்களுக்கு இடையில் நெருக்கடிகளை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். எனவே நாம் இந்த விஷயத்தில் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும். இதைப் பற்றி நாம் பேச வேண்டும்.

வடக்கு மாகாண சிங்கள மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். வெள்ளவத்தை, தெஹிவளை மற்றும் தென் மாகாணங்களில் உள்ள தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் நட்புறவுடன் உள்ளனர். கொழும்பு முஸ்லிம் மக்களும் சிறப்பாக செயற்படுகின்றனர்.சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்தால் ஒரு நாடு என்ற வகையில் நல்ல பயணத்தை மேற்கொள்ள முடியும். நான் இதைச் சொன்னால் அடிபடுவேன். ஆனால் இதைப் பற்றி நாம் பேச வேண்டும். நாட்டைப் பற்றி சிந்தித்து முடிவெடுக்கும் போது யாராவது எதிர்ப்பார்கள். ஈஸ்டர் தாக்குதல் குறித்து எந்த மதத் தலைவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இது தீவிரவாதிகளின் செயல்.

இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படும் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' வீடமைப்பு திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் வீட்டு உரிமையாளர்களுக்கான நிரந்தர வீட்டு உறுதிப்பத்திரங்கள் மற்றும் வீட்டுக்கடன் வழங்கும் நிகழ்வு நேற்று (01) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தவை வருமாறு–

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்று நாட்டில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறுகிறது. நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் அதிகாரத்தைப் பிரிக்கச் சொல்கின்றன. நான் முன்னாள் முதலமைச்சர். மாகாண சபைக்கு நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருந்து வருகிறேன். கொழும்பில் இருந்து கொண்டு கல்வி அமைச்சில் பணியாற்றுவதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. சுதந்திரத்திற்குப் பிறகு, பல ஆண்டுகள் இதனை அனுபவித்துள்ளோம்.

முப்பது வருட யுத்தம் இந்த நாட்டை பின்னோக்கி கொண்டு சென்றது. அக்காலகட்டத்தில் மேல் மாகாண பாடசாலைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த திறமையான ஆசிரியர்கள் பணியாற்றியதாக எனக்கு ஞாபகம். ஏனெனில் அவர்களால் இந்த மாகாணங்களில் வேலை செய்ய முடியவில்லை. இந்த மாகாணங்களில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வி வசதி இருக்கவில்லை. எங்களிடம் இருந்தது போர் மட்டுமே.

அதுபோல, 71 ஆம் ஆண்டுப் போராட்டம், 83 ஆம் ஆண்டு கறுப்பு ஜுலை, 88 – 89ஆம் ஆண்டு பயங்கரவாதம் என்பன இந்த நாட்டை பின்னோக்கிக் கொண்டு சென்றன. ஆழிப் பேரலை, மண்சரிவு மற்றும் கோவிட் தொற்று நோய் போன்ற இயற்கை சீற்றங்களும் இந்த நாட்டை பின்னோக்கி கொண்டு சென்றுள்ளன.

நாம் ஒரு நாட்டின் அடிப்படையில் உயர வேண்டுமானால், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இதைச் செய்ய முயலும்போது, தீவிரவாதிகள் எங்களின் கால்களை இழுத்துச் செல்கின்றனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் தீவிரவாதிகள் தமது அரசியல் பிழைப்புக்காக நாட்டை முன்னோக்கி நகர்த்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கு செயற்படுகின்றனர்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அரசமைப்பில் உள்ள ஒன்று. அதன் ஊடாக மாகாண முதலமைச்சர்களாக செயற்பட்டோம். ஆனால் யுத்தம் காரணமாக எங்களுக்குள் மனக் கசப்பு ஏற்பட்டது. எனவே, மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க அவர்கள் விரும்பவில்லை. அரசு என்ற வகையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒதுக்கி விட்டு ஏனைய நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம். ஆனால் வடக்கிலுள்ள சில அரசியல் கட்சித் தலைவர்கள் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கேட்கின்றனர். அந்த இரண்டும் இல்லாமல் மற்ற நிர்வாக அதிகாரங்கள் தேவையற்றது என்கிறார்கள். இதனால், எந்த வழியில் சென்றாலும், அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அரசு எடுக்கும் முடிவுகள் பிரபலமாக இல்லை. நாம் எடுக்கும் முடிவுகளால் சிலர் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். எனவே மாற்று வழிகளைத் தேடுகிறோம். ஆனால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி தலைமையிலான அரசின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. அதனால்தான் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாட்டில் விவாதம் எழுந்துள்ளது. இது இன்னும் நடைமுறையில் உள்ளது. எனவே, 13 வேண்டாம் என்று கூறினால், அந்தத் திருத்தம் அரசியல் சட்டத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.– என்றார்.

# ஜப்பானின் பிரதமர் இலங்கை வருவார்



ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

புதுடில்லியில் நடைபெறவுள்ள "ஜி – 20" அரச தலைவர் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா வரும் ஜப்பானிய பிரதமர் இலங்கைக்கும் விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் முக்கிய அபிவிருத்தி உதவி பங்காளிகளில் ஒன்றான ஜப்பானின் தலைவர், நாட்டின் கடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இலங்கை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார் என மேலும் தெரியவருகிறது.

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





(கே. எ. ஹமீட்)

காத்தான்குடி ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் ஆசிரியர் மாநாடும் ஈ.பி. தடை தாண்டல் பரீட்சையை நிறைவு செய்த 70 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வியாழக்கிழமை இடம்பெற்றன.

ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் ஏ. றியாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார். நிகழ்வில் மட்டக் களப்பு மத்தி கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். முபாஸ்தீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி.எம். றநீம், சமூக செயற்பாட்டாளர் ஏ.எல். மும்தாஸ், முன்னாள் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் றுஸ்வின் முஹம்மட், ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கைப் பல்கலைக் கழகங்களின் விளையாட்டு விழா இம்முறை கிழக்கில்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கைப் பல்கலைக் கழகங்களிடையே இடம்பெற்றுவரும் விளையாட்டு விழாவில் 14 ஆவது விழா இம்முறை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம் பெறவுள்ளது.

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான நிகழ்வுகளில் மிக பிரமாண்டமாக வர்ணிக்கப்படும் – எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்த நிகழ்வை இம்முறை கிழக்குப் பல்கலைக் கழகம் தலைமையேற்று நடத்துகின்றது.

இலங்கையில் உள்ள 16 தேசிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் பங்குகொள்ள எதிர்பார்க்கப்படும் இவ்விளையாட்டுப் போட்டியில் 40 நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். வ.கணகசிங்கம் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினரின் அழைப்பின் பேரில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதம மந்திரி மாண்புமிகு தினேஷ் குணவர்த்தன பிரதம அதிதியாகவும், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த கௌரவ அதிதியாகவும், கல்வியமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க மற்றும் பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ. உடவத்த ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள 17 பல்கலைக் கழகங்களதும் உபவேந்தர்களும் கலந்து கொள்வதும் இந்நிகழ்வின் சிறப்பு அம்சமாகும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணில் ஆதரவு...**

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் அதிகாரம் உட்பட சகல பொறுப்புக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் யாப்பாவிடம் ஒப்படைக்கும் யோசனை, நாடாளுமன்ற உறுப்பினர் லன்ஸா மற்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் முன்வைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற குழு அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் கூடிய போது யாப்பா புதிய பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

சொந்த பிக்கு அமைப்பு

இந்த நிலையில் கொழும்பு, புத்தளம் மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சில உள்ளூர் அரசியல்வாதிகள் இந்தக் கூட்டணியில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய கூட்டணி விரைவில் தனது சொந்த பிக்கு அமைப்பை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

இந்த கூட்டணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான கூட்டணியாகவே உருவாக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**கரடி தாக்கி...**

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற குடும்பஸ்தர் மீதே நேற்று கரடி தாக்கியுள்ளது.

கரடியின் தாக்குதலுக்கு உள்ளான குறித்த குடும்பஸ்தர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கரடியின் பிடியில் இருந்து தப்பி வந்த அவரை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வேட்புமனுவை...

கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி நாடாளுமன்றமே ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையான அரச நிர்வாகம் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவிடமே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தேர்தல் சட்டத்தின் பிரகாரம் வாக்காளர் பதிவு நடவடிக்கைகளைப் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்க வேண்டும். நிதி நெருக்கடி காரணமாக இம்முறை வாக்காளர் பதவி உள்ளிட்ட சகல பணிகளும் தாமதமடைந்தன. பாரிய போராட்டத்துக்கு மத்தியில் தேர்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இருப்பினும் இறுதிக் கட்டத்தில் நிதி விடுவிப்பு முடக்கப்பட்டதால் தேர்தல் வாக்கெடுப்பு எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது." – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தெரிவுக் குழுவின் உறுப்பினர் ரோஹன பண்டார, "உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது இடம்பெறும் என்ற நிச்சயமற்ற தன்மை காணப்படும் நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?" – என்று கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, "உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 3 ஆயிரம் அரச சேவையாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்கள். சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களுக்கு அரச நிர்வாகம் அமைச்சின் ஊடாக தற்காலிக தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தின் 120 ஆவது பிரிவின் பிரகாரம் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் அரச சேவையாளர் ஒருவர் தேர்தல் வாக்கெடுப்பு இடம்பெறும் வரை அரச சேவையில் ஈடுபட முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தேர்தல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் எம்மால் செயற்பட முடியாது.

அத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்து செய்யும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. இவ்விடயம் குறித்து சகல கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காண வேண்டும்." – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையிலான அரச நிர்வாகம் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் ஜகத் குமார. "உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது இடம்பெறும் என்று குறிப்பிட முடியாத நிலை காணப்படுவதால் தாக்கல் செய்த வேட்புமனுக்களை இரத்துச் செய்ய அரசு அவதானம் செலுத்தியுள்ளது. அதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுக்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது." – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க, வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு முன்னர் தேர்தல் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ள நிதியைப் பெற்றுத் தாருங்கள்" – என்று வலியுறுத்தினார்.

## பிரபா தவிர...

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தமிழர் தரப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், மோதல்களால் பலரை நாங்கள் இழந்திருக்கின்றோம். குறிப்பாக என்னுடைய தந்தையாரைக் (வி.தர்மலிங்கம்) கூட நான் இழந்திருக்கின்றேன். இதனை யார் செய்தார்கள் என்பதும் எங்களில் பலருக்கும் தெரிந்திருக்கலாம்.

அதற்காகப் பழிவாங்கும் உணர்வோடு அல்லது அந்த நோக்கத்தோடு நாம் செயற்படவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் என்ற அடிப்படையில் மன்னித்து ஒருமித்து ஓரணியாகப் பலமான சக்தியாகச் செயற்பட வேண்டும்.

இதைவிடுத்துப் பழிவாங்கும் நோக்கத்துடன் நாம் செயற்படுவோமாக இருந்தால் எமது இனம் இன்னும் இன்னும் பின்னோக்கிச் சென்று பெரும் பாதிப்பையே எதிர்நோக்க வேண்டியதாக இருக்கும்.

தமிழ் அரசியல் தலைவர்களில் எனது தந்தையாரே முதலில் கொல்லப்பட்டிருக்கலாமென நான் நினைக்கின்றேன். அதன் பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கொலைகள் இடம்பெற்றும் இருக்கின்றன.

என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் தம்பி பிரபாகரனைத் தவிர வேறு எந்தவொரு தமிழ் அரசியல் தலைவரும் சிங்களப் படைகளால் அல்லது பொலிஸாரால் அல்லது சிங்களத் தரப்பால் கொல்லப்படவில்லை.

கொல்லப்பட்ட அத்தனை பேரும் குறிப்பாக இறுதியாகக் கொல்லப்பட்ட முன்னாள் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் வரை இவர்களெல்லாம்தமிழ்த்தரப்புக்களாலேபடுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இருந்தாலும் இதையே பேசிக் கொண்டு இருப்போமானால் இனத்தைக் கூறுபோடுவது மட்டுமல்ல பலவீனமான நிலைக்கே இட்டுச் செல்லும் ஆபத்தும் உள்ளது.

ஆகவே, நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் அதனை மன்னித்து அடுத்தகட்ட அரசியலை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற சிந்தனையில் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

மேலும் நடந்தவைகளை மீண்டும் மீட்டிக் கொண்டிராமல் அவற்றை மன்னித்து ஒற்றுமையை உருவாக்கினால் பலமான சமூகத்தை உருவாக்க முடியும். ஆகையால் இனத்தின் எதிர்காலம் கருதி மன்னித்து ஓரணியாகச் செயற்பட வேண்டும்

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துங்கள் என்று நாங்கள் உட்பட சில தரப்புகள் இணைந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், இதுதான் இறுதி முடிவாக நீங்கள் யாரும் சொல்லவில்லை.

13 ஐ ஏன் கேட்கின்றோம் என்றால் இருப்பதையாவது முதலில் காப்பாற்றுங்கள் என்பதற்காகவேதான். உண்மையாகவே சமஷ்டி அடிப்படை தீர்வுதான் எங்கள் எல்லோராலும்கூடக் கேட்கப்படுகின்றது. அதனை அடைவதற்கு முன்னதாக இருப்பதை நடைமுறைப்படுத்தக் கோருவதில் என்ன தவறு இருக்கின்றது.?

இந்த 13 ஆவது திருத்தத்தை வேண்டாம் என்றுவிட்டு இலங்கை அரசுக்கு நிலைமைகளைச் சாதகமாக்குவதால் எங்கள் இனத்துக்கு எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்குச் சிங்களத் தரப்பில் பலர் அக்கறையாக உள்ளனர்.

தற்போதைய நிலைமைகளைப் பொறுத்தவரையில் யுத்தம் முடிந்துவிட்டது. எல்லோரும் அமைதியாக உள்ளோம். ஒரே நாட்டுக்குள் வாழலாம் என்ற சிந்தனையில் சிங்களத் தரப்பில் உள்ளவர்கள் இந்த 13 ஆவது திருத்தம் தேவையில்லை என்றும், அதனை நீக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

நாட்டில் மத, இன, மொழி ரீதியாகப் பாகுபாடு காட்டப்படுகின்றது. சிங்கள மதம், சிங்கள இனம், சிங்கள மொழி தான் முதன்மையானது என்ற சிந்தனையில் சிங்கள பௌத்த மயமாக்கலைச் செய்து வருகின்றனர்.

கடந்த காலங்களைப் போல் மீண்டும் இன ரீதியான பாகுபாடுகள், முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலைமைகள் தொடர அனுமதிக்கக்கூடாது. இதனைத் தடுத்து நிறுத்துவதே நாட்டுக்கு நல்லது." – என்றார்.

## தமிழ்க் கூட்டமைப்பின்...

சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அண்மைய நாள்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

தற்போதுநிலவும்நெருக்கடியானநிலையை அடுத்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படுமா? இல்லையா? என்ற நிச்சயமற்ற நிலை உள்ளது.

மாகாண சபைத் தேர்தலுக்குத் என்ன நடந்தது என அனைவரும் அறிவார்கள்.

இந்தநிலையில், எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களிலும் அவ்வாறான நிலை ஏற்பட்டால் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன." – என்றார்.

## வாகன விபத்தில்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 48 வயதுடைய தந்தையும், 16 வயதுடைய மகளுமே விபத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தின் பின்னர் லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனவும், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் வாரியபொல பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## தர்மலிங்கத்தின்...

அரசியல்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆற்றினார்.

நினைவஞ்சலியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். கட்டுடையில்...

இளைஞரை மடக்கிப் பிடித்தனர்.

29 வயதான அந்த நபர் வன்முறைச் செயலுக்காக இவ்வாறு சென்றிருக்கக் கூடும் எனச் சந்தேகம் வெளியிட்ட பொலிஸார், அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கல்முனையில் தனியார் வகுப்புகளுக்குக் கட்டுப்பாடு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெறும் தனியார் வகுப்புகளை முறையாக ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை (31) மாநகர சபை கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் நெறிப்படுத்தலில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உட்பட அதிகாரிகள் பலரும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள், நடத்துனர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தற்கால சூழ்நிலையில் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் கருத்தில் கொண்டு முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை நேரங்களில் எக்காரணம் கொண்டும் தனியார் வகுப்புகள் நடத்தப்படக்கூடாது.

ஞாயிறு தினங்களில் அஹதியா மற்றும் அறநெறிப் பாடசாலை நடைபெறும் நேரத்திலும் தனியார் வகுப்புகள் நடத்தப்படக்கூடாது.

தரம்-1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரையான தனியார் வகுப்புகள் மாலை 6 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும்.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தனியார் வகுப்புகள் மாலை 6.30 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும்.

இம்முறை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வகுப்புகளை மாத்திரம் எதிர்வரும் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை இரவு 9 மணி வரை நடத்த நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் சுகாதார மற்றும் காற்றோட்ட சூழலைக் கொண்டிருப்பதுடன் அங்கு கட்டாயம் ஆண், பெண்களுக்கென தனித்தனியான மலசல கூடங்கள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

இட நெருக்கடியற்ற வகையில் போதிய தளபாட வசதிகள் இருத்தல் வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறான விதிமுறைகளை மீறும் நடத்துனர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன் போது மாநகர ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்டது.




# கல்முனை அல் பஹ்ரியாவில் சாரணர் குழு அங்குரார்ப்பணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் சாரணர் குழுவுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல், அந்த மாணவர்களுக்கு புதிய சீருடை மற்றும் சாரணிய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபரும்,சாரணியத்துக்குப் பொறுப்பான ஆசிரியருமான எம்.ஏ. சலாம் , உதவி அதிபர் ஈ.றினோஸ் நஜ்மீர், ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் ஏ.ஸி.எம்.நளீம், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் யூ.எல்.றியால், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.எல்.ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2010 க.பொ.த. சாதாரணதர மாணவர் எஸ்.எம்.சனூஸின் ஒருங்கிணைப்பில் 2002 சாதாரணதர பழைய மாணவர் சார்பாக எஸ்.என்.ஹஸ்மி , 2006 சாதாரணதர மாணவர் சார்பாக எஸ்.எம்.பர்ஸான், நலன்விரும்பிகளான எஸ்.எம்.ஸிராஜ் ஏ.ஆர்.எம்.றிஸான் ஆகியோரினது பங்களிப்புடனும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570

## யார் நண்பன்? யார் பகைவன்?

இந்தியாவில் பொதுத்தேர்தல் நேரத்துடன் அறிவிக்கப்படக் கூடிய சூழலில், தென்னிந்தியத் தேர்தல் பிரசாரத்தில் இலங்கைத் தமிழர் இனப் பிரச்சனைக்கான தீர்வு விவகாரமும், மீனவர் பிரச்சினையும், கச்சதீவு விடயமும் முக்கிய இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இலங்கையில் காலூன்றும் சீனாவின் எந்த எத்தனமும் தனது பாதுகாப்புக்கும் நலனுக்கும் உகந்ததல்ல என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்படும் இந்தியா, இந்த விடயத்தில் தீர்க்கமான சில முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இப்போது தள்ளப்பட்டுள்ள சூழலில், இந்தத் தேர்தல் வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் இலங்கையுடனான இந்திய உறவு, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய ஊடாட்டங்கள், இலங்கைத் தீவில் தமிழர்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகின்றமை போன்றவை எல்லாம் தேர்தல் பிரச்சாரக் களத்தில் சூடு கிளப்பும் என எதிர்பார்க்க முடியும்.

இப்போதும் கூட, இந்தியா - குறிப்பாக புதுடில்லி தலைமை - தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய ஒரு விடயத்தை திரும்பவும் ஒரு தடவை வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அது - இலங்கையில் தனது உண்மையான நண்பன் யார், நண்பன் போன்று வேடதாரியாக நடிக்கும் கபடப் பகைவன் யார் என்பதை புதுடில்லி இப்போதாவது தீர்மானகரமாக அடையாளம் கண்டு, அதன் அடிப்படையில் இராஜதந்திர நகர்வுகளை இனியாவது முன்னெடுக்க வேண்டும் என்பதுதான்.

இது விடயத்தில் கடந்த காலத்தில் இந்திய இராஜதந்திரம் பெரும் தவறு இழைத்து விட்டது என்பதும், சீனத் துரும்பை வைத்து, நலிந்த நாடான இலங்கை, வலிந்த தேசமான பாரதத்தை வெளிப்படையாகத் தெரியாத விதத்தில் ஆட்டிப் படைக்கின்றது என்பதும் கண் கூடு.

இந்திய இராஜதந்திர வட்டாரங்களும், இந்திய ஆதரவு விமர்சர்களும் என்ன சமாதானம் - திருப்தி - கூறினாலும் கொழும்பைக் கையாளும் விவகாரத்தில் புதுடில்லியின் இராஜதந்திரம் காற்றுப்போன பலூனாகிவிட்டது என்பதுதான் உண்மை. இலங்கையில் தனது உண்மை உறவுகளை - நண்பர்களை - சரியாக அடையாளம் காணாமல், "அரசுக் கட்டமைப்பு" என்ற மேன்மைக்கு முதலிடம் தந்த புதுடில்லியின் இராஜதந்திரம் இந்தியாவுக்குத் தோல்வியை தந்து நிற்பது தெளிவு.

இது விடயத்தில், இந்தியாவின் வலிமையான பிரதம மந்திரி என்று கூறப்பட்ட இந்திரா காந்திக்குப் பின்னர் இந்தியா மீண்டெழவே இல்லை என்பதும் மறுக்கப்பட முடியாத விடயம்.

இப்போதைய பிரதமர் நரேந்திர மோடி இது விடயத்தில் சளைத்தவர் அல்லர், பாதுகாப்பு - பொருளாதாரம் - சர்வதேச இராஜதந்திரக் கையாளுகை போன்றவற்றில் இந்தியாவைப் பலமாகத் தூக்கி நிறுத்திய சாமர்த்தியசாலி என்றெல்லாம் புகழப்பட்டாலும், பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக் கிடக்கும் கொழும்பின் பேரினவாதப் போக்கு அரசுக்கு முன்னால் அவரது இராஜதந்திரங்களும், அரசியல் அணுகுமுறைகளும், பொருளாதார - பாதுகாப்பு வலிமையும் எதுவுமே செய்யவில்லை என்பதுதான் உண்மை.

இந்துத்துவாவின் சனாதன தர்மத்துக்குள் பௌத்தமும் அடங்குகின்றது என்ற மோடி தரப்பின் தாராளப் போக்கையும் சிந்தனையையும் வாய்ப்பாகப் பயன்படுத்தி, மறுபக்கம் சீனத்துரும்பைக் கையாண்டவாறு, தன் னிஷ்டப்படி இந்தப் பிராந்திய விடயங்களை கொழும்பு முன்னெடுக்கின்றது. அதற்குப் பின்னால் புதுடில்லி துவண்டு கிடக்கின்றது என்பதுதான் யதார்த்தம்.

இந்தப் பின்புலத்தில், இந்தத் தேர்தல் சமயத்தில், இலங்கைத் தமிழர்களும் அவர்களின் தலைவர்களும், எப்படிச் செயல்பட வேண்டும்? அதையும் பின்னர் ஒரு தடவை இப்பத்தியில் பார்க்கலாம்.



## சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்

அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் ஒரு நாள் பயிற்சி நெறி நேற்று (01) வெரிட்டே ரிசர்ச் மூலம் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிக் கற்கைநெறியின் முதன்மை நோக்கம் அரச நிதி முகாமைத்துவம் மற்றும் தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் பற்றிய புரிதல் மற்றும் அறிவை மேம்படுத்துவதாகும்.

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெற்ற பயிற்சிக் கற்கை நெறியின் வளவாளராக முன்னணி பொருளியலாளர் ராஜ் பிரபு ராஜகுலேந்திரன மற்றும் வெரிட்டே ரிசர்ச் ஊடக பிரிவின் உதவி முகாமையாளர் எட்வர்ட் உதயதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒரு நாள் பயிற்சிக் நெறியில் சர்வதேச நாணய நிதியத்தின் கண்காணிப்பான் மற்றும் விரிவாக்கப்பட்ட கடன் வசதி திட்டம், தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் மாகாண வரவு செலவுத் திட்டம், அரச வருமானம் மற்றும் செலவினம் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பயிற்சிகளில் பூரணமாக கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு வெற்றிகரமான பங்கேற்பை அங்கீகரிக்கும் வகையில் வெரிட்டே ரிசர்ச் சார்பாகச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு தேசிய ரீதியில் கௌரவ விருது



(அ.அஸ்வர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற யொவுன் வாசனா வேலைத் திட்டத்தில் தேசிய ரீதியில் மட்டக்களப்பு மாவட்டத்துக்குக் கௌரவ விருது கிடைத்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழகங்களிடையே நடத்தப்பட்ட இந்த வேலைத் திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று (01) மகரகம இளைஞர் நிலையத்தில் விமர்சையாக இடம்பெற்றது.

யொவுன் வாசனா வேலைத் திட்டத்தில் தேசிய ரீதியாக குருநாகல், நுவரெலியா, மொனராகலை மாவட்டங்கள் முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

இதில் மட்டக்களப்பு மாவட்டம் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், வழங்கப்பட்டிருந்த டிக்கட்டுகளை விட தேசிய ரீதியில் மேலதிகமாக பெற்று விற்பனை செய்தமைக்கான பாராட்டையும், கௌரவத்தையும் பெற்றுக்கொண்டது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜே.கலைரணி, இளைஞர் சேவை அதிகாரிகளான ரீ.சபியதாஸ், ரீ.விந்தியன், ஆர்.பிரவீன் மாவட்ட சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் தேசிய ரீதியில் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்தவர்களாக கௌரவபடுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வில் விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்தின ஆகியோரால் பாராட்டு பத்திரம், சான்றிதழ் மற்றும் பணப் பரிசுகள் என்பன வழங்கப்பட்டன.





# போக்குவரத்து விதிகள் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு

(பௌசுல் றிபாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் பொதுப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.சீ. எம்.ஹறிஸின் வழிகாட்டலின் கீழ் போக்குவரத்து பிரிவுப் பொறுப்பாசிரியர் றிப்கி தலைமையில் பாடசாலை கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மாணவர்களின் போக்குவரத்து விதிமுறைகள், அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விடயங்கள் , போக்குவரத்து விதிமுறைகளை தவறும் பட்சத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் சம்பந்தமாகவும் அக்கரைப்பற்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் காரசிங்க விளக்கமளித்தார்.



தென்மராட்சி, நாவற்குழி மேற்கு சித்தி விநாயகர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா புதன்கிழமை (30) இடம் பெற்றது. (த.சுபேசன்)

## சமபோஷவின் வலுவூட்டலுடன் பாடசாலைகளிடையே போட்டிகள்

( அஸ்ஹர்இப்றாஹிம்)

சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் உப நிறுவனமான பிளண்டி புட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி தயாரிப்பான சமபோஷவின் வலுவூட்டலுடன் கிழக்கு ,ஊவா, வடமத்திய, வடமேல் மற்றும் தெற்கு ஆகிய 5 மாகாணங்களை மையமாகக் கொண்டு 2023 மாகாண பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகள் இந்த மாதம் நடைபெறவுள்ளன.

தனித்தனியாக அந்தந்த மாகாணங்களில் இடம் பெறவுள்ள போட்டி சமபோஷ நிறுவனத்தின் அனுசரணையில் மாகாண கல்வித் திணைக்களம் இணைந்து நடத்தவுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டியில் 700 இற்கும் அதிகமான போட்டி நிகழ்வுகளில் 650 இற்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் பாடசாலைகளுக்கும், வீர, வீராங்கனைகளுக்கும் வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ் மற்றும் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.





# தனியார் பஸ் சாரதிகளுக்கு அனுமதி பெறச் செயலமர்வு

(அ.அஸ்வர்)

தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான இரண்டு நாள் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஹட்டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஹட்டன், பொகவந்தலாவை, மஸ்கெலியா, தலவாக்கலை, கினிகத்தேனை உள்ளிட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் போக்குவரத்து, பாடசாலை சேவை மற்றும் ஆடைத்தொழிற்சாலை சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் உப தலைவர் எம். உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி, ஹட்டன் தனியார் பஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

செயலமர்வின் வளவாளர்களாக இலங்கை போக்குவரத்து சேவை தலைமையக பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டு தேவையான வழிகாட்டல்களையும், அறிவுரைகளையும் வழங்கினர்.





# சாவகச்சேரியில் திருட்டை ஒழிக்க விசேட சோதனை நடவடிக்கைகள்

(து.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேசத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்ற திருட்டுச் சம்பவங்களை தடுக்கும் முகமாக சாவகச்சேரிப் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில இடங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையிலேயே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வயல், மட்டுவில், நுணாவில் ஆகிய கிராமங்களில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# 'ரக்ஷபந்தன்' ராக்கி நூல் கல்முனையில் அணிவிப்பு

( வி.ரி. சகாதேவராஜா)

'ரக்ஷ பந்தன்' என்னும் ராக்கி நூல் அணிவிப்பும் விசேட இறை சொற்பொழிவும் கல்முனை பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தில் நடைபெற்றன .

50 வருட தவயோக அனுபவும் முதிர்ச்சியும் பெற்ற இராஜயோகினி மஞ்சு 'பயமும் பதற்றமும் அற்ற வாழ்வு' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

அதைத் தொடர்ந்து கலந்து கொண்ட அனைவருக்கும் "ரக்ஷ பந்தன்" புனித நூல் அணிவிக்கப்பட்டது.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த பயிர்ச் செய்கைப் பொருள்கள்



(பௌசுல் றிபாஸ் )

கிராமிய பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் பயறு மற்றும் உழுந்து பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பாசிப்பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ மஜீட், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏ. எஸ். சபானா, வி.விஸ்வானந்தி, எம். ஏ. சிபானா ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# ஐந்து நூல்கள் வெளியீடு!

(த.சுபேசன்)

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கவிஞர் ஆ.ஜென்சன் றொனால்ட் (சூரிய நிலா) எழுதிய "காப்பு,வனப்பு, திறப்பு,விழிப்பு மற்றும் உயிர்ப்பு" ஆகிய ஐந்து நூல்களின் வெளியீட்டு வைபவம் புதன்கிழமை (30) பிற்பகல் கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி சி.சுதோகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கனடா, வள்ளுவன் வழி உலக இணையப் பள்ளியைச் சேர்ந்த திருமதி ஜோதி ஜெயக்குமார், உசன் பவுண்டேசன் அமைப்பின் உப தலைவர் வைத்தியக்கலாநிதி ஜெபநாமகணேசன் மற்றும் சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி க.சிவசுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது "காப்பு" என்ற உணவுப் பாதுகாப்பு சுகாதார மேம்பாட்டு நூலுக்கான திறனாய்வு உரையை வைத்தியக் கலாநிதி சுதோகுமாரும்–

"வனப்பு" கவிதைத் தொகுதி நூலுக்கான திறனாய்வு உரையைத் திருமதி ஜோதி ஜெயக்குமாரும்–

"திறப்பு" என்ற நேர்வய சிந்தனைகள் நூலுக்கான திறனாய்வை வைத்திய கலாநிதி ஜெபநாமக ணேசனும்–

"விழிப்பு" என்ற தொற்றா நோய்த் தடுப்பு சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வை வைத்தியக்கலாநிதி க.சிவசுதனும்–

"உயிர்ப்பு" என்ற தாய் சேய் நலன் சார்ந்த சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வு உரையை வைத்தியக்கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் வழங்கி நுல்களை வெளியிட்டு வைத்தனர்.

நிகழ்வில் வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவகர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# மன்னார் செல்வமுத்துமாரி அம்மன் தீ மிதிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் நானாட்டான் ஶ்ரீ செல்வ முத்து மாரியம்மன் ஆலய திருவிழா தீ மிதிப்பு வைபவத்துடன் (30) நிறைவுற்றது.கடந்த 10 ஆம் திகதி வவுனியா சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் தலைமையில் கொடியேற்றப்பட்டு திருவிழா இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் நாட்டில் 2011 ஆம் ஆண்டு பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது அதன் தொடர்ச்சியாக அதே ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி சுனாமி பேரலை ஜப்பானை கடுமையாக தாக்கியது. இதில் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டதுடன் உயிரிழந்தனர். அக்காலப் பகுதியில் பாரிய பாதிப்பை சந்தித்தது புகுஷிமா பகுதியில் அமைந்திருக்கக் கூடிய மிகப்பெரியதும், உலகத்திலேயே பாதுகாப்பானதுமான புகுஷிமா அணு உலை. சுனாமியின் போது இவ் அணு உலையில் கடல்நீர்




# பசுபிக் பெருங்கடலுடன் கலக்கிறது ஜப்பான் அணுசக்தி நிலைய கழிவு நீர்!

பெருமளவு ஊடுருவியது. அணு மின் நிலையத்தின் தொழிற்பாட்டுக்குரிய பல மின்சார இயந்திரங்கள் செயலற்றமையால் உலைகளை குளிர்விக்கக் கூடிய சாதனங்கள் அனைத்தும் செயலிழந்தன. இதனால் அணு உலையில் வெப்பம் அதிகரித்தது. அதன் விளைவால் ஆறு யூனிட்களில் மூன்று யூனிட்கள் முற்றிலும் சேதமாகியது. அணுஉலையை சுற்றியுள்ள பகுதிகளை கதிர்வீச்சு தாக்கியது.

காற்றில் பரவக் கூடிய கதிர்வீச்சைத் தடுப்பதற்கும் வெப்பத்தை குறைப்பதற்கும் இலட்சக்கணக்கான லீற்றர் நீரை ஜப்பான் அரசு பயன்படுத்தியது. இவ்விபத்து நிகழ்ந்து 12 ஆண்டுகள் கழிந்தும் கூட அணு உலையில் கதிர்வீச்சின் தாக்கம் உள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் புகுஷிமா அணு உலையில் இருக்கக் கூடிய அணுக் கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றியதன் பின்னர் இவ்வணு உலையை முழுமையாக செயலிழக்கக் கூடிய பணிகளில் டெப்கோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ரஷ்யாவில் 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற செர்னோபில் அணு உலை விபத்துக்கு பின்னர் உலகில் இரண்டாவது மிகப் பெரிய அணு உலை விபத்தாக புகுஷிமா அணு உலை கருதப்படுகிறது. இச்சம்பவத்துக்குப் பின்னர் அப்பகுதியில் வாழும் அனைத்து மக்களும் அப்புறப்படுத்தப்பட்டனர். மனிதர்கள் வாழ்வதற்கு தகுதியற்ற இடம் என அறிவிக்கப்பட்டது. குறித்த பிரதேசத்தில் பூக்கும் பூக்கள் மாறுபட்ட வடிவில் பூப்பதாகவும் இதற்கு கதிர்வீச்சுக்களே காரணம் என்று கூறப்பட்டது. மரபுப் பிறழ்ச்சி, மரபணு மற்றும் ஹார்மோன்களில் ஏற்பட்ட மாற்றம் என்பன பூக்களின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் விளைவால் பூக்கள் மாறுபட்ட வடிவத்தில் பூக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். புகுஷிமா அணு உலை விபத்தால் வெளிப்பட்ட கதிர்வீச்சுக்களின் தாக்கமானது நாடுகளைக் கடந்தும் அதிகமாக உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் விளையக் கூடிய திராட்சைகளில் புகுஷிமா அணு உலையினுடைய கதிர்வீச்சுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விபத்து இடம்பெற்று பத்து ஆண்டுகள் கடந்தும் கூட புகுஷிமா அணு உலை கதிர் வீச்சுகளின் தாக்கம் குறையவில்லை. இதற்கிடையில் அணு உலையை முழுமையாக செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்கான பணிகள் கடந்த 2022 ஆம் ஆண்டில் இருந்து ஜப்பானிய டெப்கோ நிறுவனம் தொடங்கியது.

ஜப்பானின் புகுஷிமா அணு உலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் ஜப்பான் கடந்த வியாழனன்று (2023.08.24) திறந்து விட்டுள்ளது. இதனை ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பு ஏற்றுக்கொண்டாலும் அக்கழிவு நீரில் அகற்றப்படாத கதிரியக்கம் எஞ்சியிருக்குமோ என்ற அச்சம் மக்களிடம் காணப்படுகிறது. இதையடுத்து ஜப்பானிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய சீனாவும் தென்கொரியாவும் தடை விதித்துள்ளன. ஹாங்காங்கும் தனது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானின் கருத்து

சேதமடைந்த புகுஷிமா அணு உலையின் கதிர்வீச்சைக் குறைப்பதற்கு இதுவரைக்கும் 13 லட்சம் லீற்றருக்கு அதிகமான நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட நீரானது கதிர்வீச்சுடன் கலந்து கழிவு நீராக மாறியது. இக்கழிவு நீரானது சுத்திகரிக்கப்பட்டு அணு உலைக்கு அருகிலுள்ள தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த ஆண்டு கழிவு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள அத்தொட்டிகள் நிரம்பக் கூடிய நிலையில் உள்ளதாக டெப்கோ நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது புகுஷிமா அணு உலையின் கழிவுகள் நிறைந்த சுமார் 1,25,000 டொன் கழிவு நீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் அதிகமான தொட்டிகளில் பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பல சுற்றுகள் சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை இனியும் அப்படியே சேமித்து வைத்திருப்பது சரியான தீர்வாகாது என்று வாதிடும் ஜப்பான், அணுசக்தி நிலையத்தில் சேகரிக்கப்பட்டுள்ள ஒரு மில்லியன் தொன்கள் அளவான கழிவு நீரை பாதுகாப்பான முறையில் எதிர்வரும் 30 வருட காலப் பகுதியில் சமுத்திரத்தில் பகுதி பகுதியாக விடுவிக்க உள்ளதாகவும் இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறுகிறது.

பசுபிக் பெருங்கடலில் உள்ள கதிரியக்கத்தின் அளவைத் தொடர்ந்து கண்காணிக்கவும் வெளிப்படை தன்மையை பராமரிக்கவும் ஜப்பான் அரசு உறுதியளித்துள்ளது.

ஜப்பானின் வாதத்தை பல அறிவியலாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். ஐ.நா. அணு சக்தி பாதுகாப்பு அமைப்பும் ஜப்பானின் இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இது சர்வதேச தரத்துக்கு உட்பட்டதும், சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் மிகச் சிறியதாகவே அமையும் என அவ்வமைப்பு கூறியுள்ளது.

பிற நாடுகளின் அணு உலை கழிவு நீரில் உள்ள ட்ரிட்டியம் அளவைவிட குறைவாக அனுமதிப்பதாக ஜப்பானிய அரசு கூறுகிறது. மேலும் சர்வதேச பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் என்று கூறுகிறது. டெப்கோ நிறுவனம் மற்றும் ஜப்பானிய அரசு ஆகியவை இது குறித்து கருத்து தெரிவிக்கையில் சுற்றுச்சூழலில் இயற்கையாகவே ட்ரிட்டியம் காணப்படுவதாகவும், இதனால் கடலில் அனுமதிக்கப்படும் சிறியளவான ட்ரிட்டியம் பாதுகாப்பானது என வாதிடுகின்றனர்.

**பிற நாடுகளும், விஞ்ஞானிகளும் இத்திட்டத்தை எதிர்ப்பது ஏன்?**

ஜப்பானின் புகுஷிமா திட்டத்துக்கு சீனா, தென்கொரியா, ஹாங்காங் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன. புகுஷிமா அணுஉலை கழிவு நீரை சுத்திகரித்தாலும் அதில் உள்ள ட்ரிட்டியம் மற்றும் கார்பன்-14 ஆகிய கதிரியக்க மூலக்கூறுகள் தற்போது ஆபத்தான அளவுக்கு இருப்பதாகவும் அவற்றை முழுவதுமாக அகற்றக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய தொழில்நுட்பமானது உலகில் எந்த நாட்டிலும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் குறித்து சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஜப்பானுக்கு நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு மதிப்பீடுகளையும் அறிக்கையினையும் சமர்ப்பித்தது. இவை நம்பத்தகுந்த மதிப்பீடுகள் அல்ல என்றும் இத்திட்டம் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் சீனா கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகிறது.

இதே வேளை ஜப்பானிலிருந்து சில கடல் உணவுகளுக்கு தடை விதித்திருந்த தென்கொரியா கருத்து தெரிவிக்கையில், ஜப்பான் இக்கழிவு நீரை வெளியேற்றுவது தொடர்பில் விஞ்ஞான நியமத் தராதரங்களை பின்பற்றுவது சம்பந்தமாக சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறதா இல்லையா என்பதே தற்போது முக்கியமானதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

ட்ரிட்டியம் தோலில் ஊடுருவ முடியாத அளவுக்கு பலவீனமானது ஆனால் மிக அதிக அளவில் எடுத்துக் கொண்டால் புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கலாம் என கனேடிய அணுசக்தி பாதுகாப்பு ஆணையம் கூறியுள்ளது. “எந்த ஒரு கதிர்வீச்சும் வெளிப்படுத்தப்படும் போது சில ஆரோக்கிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்”என்று அமெரிக்க அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புக்கொண்டது.எனவே ஜப்பான் அரசானது இத்திட்டத்தை மேலும் சில பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் பெருங்கடலின் சுற்றுச்சூழல் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை ஆகியவற்றில் இத்திட்டம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்பது பிற நாடுகளின் நிலைப்பாடாகும்.

சீனாவின் எதிர்வினை என்ன?

2011 ஆம் ஆண்டு புகுஷிமா அணு உலை விபத்து நேரிட்டதுமே அப்பிராந்தியத்தில் பிடிக்கப்படும் மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம், சீனா, தென்கொரியா ஆகியவை தடை விதித்தன. தற்போது புகுஷிமா அணு உலை கழிவுநீரை திறந்து விடும் ஜப்பானின் நடவடிக்கைக்கு எதிராக சீனா மட்டுமே கடுமையாக எதிர்வினை புரிகிறது. புகுஷிமா பிராந்தியத்துக்கு மட்டுமே இருந்த தடையை ஜப்பான் முழுவதுமாக விரிவாக்கி உள்ளது. ஜப்பானிலிருந்து கடல் உணவு இறக்குமதியை சீனா முற்றிலுமாக தடை விதித்தது.

ஜப்பானிலிருந்து கடல் உணவுகளை அதிக அளவில் கொள்வனவு செய்யும் நாடான சீனா, இறக்குமதி அனைத்தையும் முடக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளது. சீனா ஜப்பானிடம் இருந்து ஒவ்வொரு வருடமும் ஒன்று தசம் ஒன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடல் உணவை இறக்குமதி செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சீனாவால் ஜப்பானிய கடல் உணவுகளுக்கு விதிக்கப்பட்ட தடையானது ஜப்பானின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிப்பதாக உள்ளதை அந்த நாடு ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி நகர்வானது சீனா மற்றும் ஜப்பானுக்கு இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது.



### ஜப்பான் மீனவர்கள் மக்களது எதிர்ப்பு

புகுஷிமா அணு உலை கழிவு நீரை பசிபிக் பெருங்கடலில் திறந்து விடும் ஜப்பான் அரசின் திட்டத்தை அந்நாட்டு மக்களே ஆதரிக்கவில்லை. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் ஜப்பானில் சரிபாதி மக்களே அரசின் திட்டத்தை ஆதரிக்கின்றனர். ஜப்பான் மீனவர்கள் மற்றும் கடலோர பகுதிகளில் வாழும் மக்களிடையே அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு அதிகமாக உள்ளது. இத்திட்டத்தால் மக்கள் கடல் உணவை புறக்கணிக்கக் கூடும் என்று அஞ்சுகின்றனர். இதனால் தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் சீர்குலைந்து விடும் என்று உள்ளூர் மீனவர்கள் கவலைப்படுகின்றனர்.

“அணுக்கழிவு நீரை பசுபிக் கடலில் கலப்பதை விட சிறந்த வேறு பல தீர்வுகள் இருக்கக்கூடும்.ஆனால் அவர்கள் இந்த நீரை கடலில் திறந்து விட முடிவு செய்துள்ளனர். இதனால் உலகக்கும் பிரச்சினையே, இதனை ஏற்றுக் கொள்ளவே முடியாது” என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய ஜப்பானிய மீனவர்கள் தெரிவித்தனர்.

கழிவுநீர் பசுபிக் கடலில் சேர்ப்பதால் கடல் நீர் மாசுபாட்டை ஊக்குவிக்க கூடும். கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் உணவுச் சங்கிலியில் தாக்கத்தை ஏற்படுத்தும். காலநிலை மாற்றம், கடல் அமிலமயமாதல், அதிகப்படியான மீன் பிடித்தல் மற்றும் மாசுபாடு ஆகியவற்றால் உலகப் பெருங்கடல்கள் ஏற்கனவே அழுத்தத்தில் உள்ளன. கதிர்வீச்சினுடைய வீரியம் குறைக்கப்பட்டாலுமே கூட அதன் நீண்ட கால விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது.

ஏற்கனவே பசுபிக் பெருங்கடலின் வளமானது முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது. பலவகையான கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைந்துள்ளன. இந்த நிலையில் ஜப்பானுடைய அணு உலைக்கழிவு நீர் அகற்றும் திட்டமானது பெரும் பாதிப்பை கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படுத்தகூடும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மிக முக்கியமாக சர்வதேச சுற்றுச் சூழல் அமைப்பு கருத்து தெரிவிக்கையில், அணு உலையில் இருந்து கழிவு நீரை கலப்பதனூடாக கடல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் மனிதனுடைய மரபணுவில் மாற்றத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை வழங்கியுள்ளது. அணு உலை அழிவடைந்த பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் பூக்கும் பூக்கள் மரபுப்பிழை காரணமாக வடிவம் மாறுபட்டும், பழங்களது வடிவம் வழமைக்கு மாறாக உள்ளன. பூக்கள், பழங்கள், மரங்களுக்கு இவ்வாறான நிலைமை ஏற்படும் போது மனிதர்களுக்கு எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என்பதை யூகிக்க முடியாது. இதனால் ஜப்பானிய மக்கள் இத்திட்டத்துக்குத் தமது எதிர்ப்பை தொடர்ந்து தெரிவிக்கின்றனர்.

### ஜப்பானின் மாற்றுபாய நடவடிக்கைகள்

2021 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை முன்மொழியும் போது பல எதிர்ப்புகள் கிளம்பியதால் இது போன்ற எதிர்வினைகள் வரலாம் என்பதை எதிர்பார்த்த ஜப்பான் அரசு மீனவர்களை காக்க மாற்று திட்டத்தை ஏற்கனவே வகுத்துள்ளது. புகுஷிமா அணு உலை கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் திறந்து விட்ட பின்னர், ஜப்பான் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பதில் சிரமம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரசே அவற்றை கொள்வனவு செய்வதாகவும், புகுஷிமா மற்றும் ஜப்பானின் பிற பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களை கொள்வனவு செய்ய புதிய நிதிக் கொள்கை உருவாக்கப்படும் என்று அந்நாட்டு அதிகாரிகள் கூறி உள்ளதாகவும் ஜப்பான் டைம்ஸ் இதழ் தெரிவித்துள்ளது.

வியாழனன்று (24.08.203) உள்ளூர் நேரப்படி பிற்பகல் ஒரு மணி முதல் புகுஷிமா அணு உலை கழிவு நீரானது பசிபிக் பெருங்கடலுக்குள் திறந்து விடப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பல கோடி லீற்றர் கதிரியக்க நீர் சிறிது சிறிதாக அடுத்த 30 ஆண்டுகளில் முழுவதுமாக பசிபிக் பெருங்கடலுக்குள் கலக்கப்படும் என்பதே ஜப்பான் அரசின் திட்டமாகும்.

**ச.தனுஷ்கா,**
*ஊடகக் கற்கைகள் துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



# சாய்ந்தமருது பொலிவேரியனில் அகற்றப்படாத திண்மக் கழிவுகள்

( அஸ்ஹர்இப்றாஹிம்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது சுனாமி குடியேற்ற கிராமமான பொலிவேரியன் பிரதேசத்தின் மேற்குப் புறமாகவுள்ள பிரதேசத்திலும், பாலத்துக்கு அருகாமையிலும், பொது விளையாட்டு மைதானத்தை சூழவும் போடப்பட்டுள்ள குப்பைகள், திண்மக் கழிவுகள் பல மாதங்களாக அகற்றப்படாமல் குவிந்து காணப்படுகின்றன.

மக்கள் நடமாட்டமுள்ள இப்பிரதேசத்தில் பொது மைதானம், விவசாய விரிவாக்கல் அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம், கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் போன்ற பல முக்கிய அலுவலகங்களும் , அரச நிறுவனங்களும் , ஹிஜ்ரா பள்ளிவாசல் போன்றனவும் அமையப் பெற்றுள்ளன.

மக்களால் கொட்டப்படும் குப்பைகள் கல்முனை மாநகரசபையால் தினசரி அகற்றப்படாமையாலேயே மாதக் கணக்கில் இந்தக் குப்பைகள் குவிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் மிருகங்களின் கழிவுகள், வீட்டுக் கழிவுகள், கண்ணாடித் துண்டுகள் என்பன வீசப்படுவதால் கட்டாக்காலி மாடு , ஆடு , நாய் , பூனை என்பனவற்றாலும் காகம் , கோழி போன்ற பறவைகளாலும் குவிந்துள்ள குப்பைகள் பல இடங்களுக்கும் பரப்பப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இப்பிரதேச மக்கள் சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சமூக அடிப்படைத் திட்டங்கள் தொடர்பில் அம்பாறையில் ஆய்வு

(அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்ட சமூக அடிப்படையிலான வாழ்வாதாரம் மற்றும் மீள தன்மைக்கான முறையான அனர்த்த அபாயக் குறைப்புத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் அண்மையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் யு.எஸ்.எஸ். நிறுவனம் என்பன இணைந்து அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதான இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடப்பட்டது.



அம்பாறை மாவட்டத்தில் விவசாயிகள், மீனவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைக் குடும்பங்கள் வெற்றிகரமான பயன்களை அனுபவிக்கும் வகையில் இந்தத் திட்டம் எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து பல்வேறு தரப்பினரும் அங்கு கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ், அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹீர், அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் துஷார பெரேரா, மாகாண விவசாய பணிப்பாளர் திஸாநாயக்க, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர், அம்பாறை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் யு.எஸ்.எயிட் நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் ஆதித்யா எல் -1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது!








## இந்தியாவின் சூரியனை நோக்கிய பயணம் ஆரம்பம்

சூரியனை ஆராய்வதற்காக இஸ்ரோ விண்ணில் செலுத்திய ஆதித்யா–எல்1 விண்கலம் வெற்றிகரமாக பயணத்தை தொடர்கிறது என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

சூரியனின் வெளிப்புற பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா–எல்1 என்ற அதிநவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் விஞ்ஞானிகள் குழு என்பன இணைந்து வடிவமைத்துள்ளன.

இதில், வான் இயற்பியல் ஆராய்ச்சி மையம், வானியல் மற்றும் விண்வெளி இயற்பியல் பல்கலைக்கழக மையம், இந்திய அறிவியல் கல்வி, ஆராய்ச்சி கழகம் ஆகியவை முக்கிய பங்காற்றியுள்ளன.

இந்தநிலையில், ஆந்திர மாநிலத்தின் ஸ்ரீஹறிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து ஆதித்யா – எல்1 விண்கலம் இன்று முற்பகல் 11.50 அளவில் விண்ணில் ஏவப்பட்டது.

சூரிய ஆய்வுக்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலமான ஆதித்யா– எல்1 சுமார் ஆயிரத்து 475 கிலோகிராம் நிறையுடையதாகும். இதில் 7 வகையான ஆய்வு கருவிகள் உள்ளன.

பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள ‘லோக்ராஞ்சியன் பொயின்ட் வன்’ எனும் பகுதியில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது.

அங்கு இருந்தபடி சூரியனின் வெளிப்புறப் பகுதியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு மற்றும் காந்தப்புலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆய்வுகளை ‘ஆதித்யா எல்–1’ விண்கலம் மேற்கொள்ளவுள்ளது.

ஏவப்பட்டத்தில் இருந்து மூன்று படிநிலைகளை வெற்றிகரமாகக் கடந்த நிலையில் அது சரியான சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்ப டும்.

இந்த நிகழ்வை இஸ்ரோ விஞ்ஞானிகள் கூர்ந்து கவனித்து வருகின்றனர்.


அதன்பின்னர் விண்கலன் 125 நாட்கள் பயணம் செய்து இலக்கை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் ஆர்.எஸ்.சிவாஜி காலமானார்: சமூக வலைதளங்களில் இரங்கல்

‘அபூர்வ சகோதரர்கள்’, ‘அன்பே சிவம்’, ‘கார்கி’ உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் நடித்த ஆர்.எஸ்.சிவாஜி தனது 66 ஆவது வயதில் காலமானார்.

நடிகர் ஆர்.எஸ்.சிவாஜி 1981ஆம் ஆண்டு வெளியான ‘பன்னீர் புஷ்பங்கள்’ திரைப்படம் மூலம் சினிமாவில் அறிமுகமானார். இவர் நடிகரும் இயக்குநருமான சந்தானபாரதியின் சகோதரர் ஆவார்.

இந்த நிலையில் இன்று காலை உடல்நலக்குறைவு காரணமாக ஆர்.எஸ். சிவாஜி காலமானார். இதனை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். நேற்று சென்னை உலக சினிமா விழாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆர்.எஸ்.சிவாஜி கலந்து கொண்டிருந்த நிலையில் இன்று அவர் உயிரிழந்திருப்பது ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



அவரது மறைவுக்கு பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# யுரேனிய வெடிபொருட்களை உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்கா!







யுரேனியம் அடங்கிய சர்ச்சைக்குரிய வெடி பொருட்களை அமெரிக்கா முதன் முறையாக உக்ரைனுக்கு வழங்கவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனுக்கான புதிய உதவிகள் தொடர்பான தகவல்கள் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என இரண்டு அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் எனரொய்ட்டர்ஸ்செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உதவி 240 முதல் 375 மில்லியன் அமெரிக்க டொலர் வரை பெறுமதியுடையவை என தெரிவிக்கப் படுகிறது.

குறித்த உதவியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா இன்னும் இறுதி செய்யவில்லை எனவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.எனினும் இந்த விடயம் தொடர்பில் வெள்ளை மாளிகை இதுவரையில் பதிலளிக் கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் இந்திய நகைக் கடைகளில் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் கைது!



அமெரிக்காவில் 4 கிழக்கு கடற்கரை மாநிலங்களில் ஒரு வருட காலமாக இந்திய மற்றும் ஏனைய ஆசிய நாடுகளை சேர்ந்தவர்களின் நகைக் கடைகளை குறிவைத்து பயங்கர ஆயுதங்களை கொண்ட குழுவொன்று கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நிலையில், அவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இந்த கும்பலால் குறி வைக்கப்பட்ட 9 தெற்காசிய நகைக் கடைகளில், 4 கடைகள் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களுக்கு சொந்தமானது.

கடந்த ஜனவரி 7, 2022-இல் இருந்து ஜனவரி 27, 2023 வரையிலான மாதங்களில் நியூ ஜெர்சி, பென்சில்வே னியா, வர்ஜீனியா மற்றும் புளோரிடாவில் ஆசிய அமெரிக்கர்களுக்கு சொந்தமான நகை கடைகளில் இந்த கும்பல் கொள்ளைகளில் ஈடுபட்டுவந் துள்ளது.

பெரும்பாலும் சிறு வணிகர்களை குறி வைத்து, பல்லாயிரக்கணக்கான டொலர் மதிப்புள்ள நகைகளை கொள்ளை யடித்துள்ளனர்.

கறுப்பு ஆடையுடன் கையுறைகள் மற்றும் முகமூடிகள் அணிந்து மாறுவேடமிட்ட இந்த கும்பல், துப்பாக்கி ஏந்தியபடி கொள்ளையடித்து, கொள் ளைக்கு பின்னர் தப்பி ஓட திருடப்பட்ட வாகனங்களையே பயன்படுத்தியுள்ளனர்.

முகமூடியணிந்து திடீரென கடைக் குள்ளே நுழைந்து துப்பாக்கியை காட்டி மிரட்டி, கடை பணியாளர்களை மிரள செய்து கைகளில் கிடைக்கும் பணத் தையும், நகைகளையும் எடுத்து கொண்டு வேகமாக ஓடி விடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அமெரிக்காவின் பல மாநிலங்களில் குற்றங்கள் நடந்ததால், மாநில அதிகாரி களும் ஒன்றுபட்டு கூட்டு நடவடிக்கையின் மூலம் தேடுதலை தொடங்கியிருந்தனர்.

இந்த நிலையில், நீண்ட விசார ணைக்கு பின்னர் பல தடயங்களை வைத்து, இந்த குற்றச்செயலில் ஈடுபட்ட 16 உறுப்பினர்கள் கொண்ட ஒரு கொள்ளை கூட்டத்தை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் மீது 19 குற்றச்சாட்டுகளுடன், ஹாப்ஸ் சட்டம் எனப்படும் மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தில் தலையிட சதி செய்தல் எனும் பிரிவிலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தானியங்கி மருந்து விநியோக இயந்திரம்!



மருந்துகளை விநியோகிக்க உலகின் முதல் தானியங்கி இயந்தி ரத்தை வெற்றிகரமாக சவூதி அரேபியா அறிமுகம் செய்துள்ளது.

சவூதி அரேபியாவின் வடமேற்கு பிராந்தியத்தில் உள்ள மன்னர் சல்மான் இராணுவ மருத்துவமனையை பிரதிநிதித்துவப்படுத்தும் பாதுகாப்பு அமைச்சகத்தின் சுகாதார சேவைக ளுக்கான பொது இயக்குநரகம் வெற்றிகரமாக தானியங்கி மருந்து விநியோக இயந்திரத்தை உருவாக் கியுள்ளது.

பயனாளிகளுக்கு குறிப்பிட்ட மருந்துகளை தினசரி, மாதாந்தம் அல்லது வருடாந்த அடிப்படையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான தகவல்களையும் இந்த இயந்திரம் வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.